செய்தி வெளியீடு எண்: 27/2017 நாள்: 18.01.2017

**வருங்கால சந்ததியினர் ஆரோக்கியமாக வாழ வேண்டுமென்றால் பெற்றோர்கள் தங்களது குழந்தைகளுக்கு தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசியினை தவறாமல் போட வேண்டும்! தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி இயக்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு வேண்டுகோள்!!**

வேலூர் மாவட்டத்தில் 9 மாதம் முடிந்த 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் ரூபெல்லா (MR) தடுப்பூசி வழங்க வருகின்ற 06.02.2017 தேதி முதல் 28.02.2017 ஆம் தேதி வரை மருத்துவ முகாம்கள் நடைபெறவுள்ளன. இது தொடர்பான தட்டம்மை மற்றும் ரூபெல்லா (MR) தடுப்பூசி இயக்கத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

தட்டம்மை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் சத்து குறைபாடுகள் ஏற்பட்டு பல்வேறு வகையான உடல் உபாதைகள் ஏற்படுகின்றன. எனவே சமூகத்தில் தட்டம்மை பாதிப்பை குறைத்து குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து இந்த தடுப்பூசி அவசியமானதாகும். இதே போல் ரூபெல்லா என்னும் ஜெர்மன் தட்டம்மை கருவுற்ற தாய்மார்களை தாக்கும் போது அவர்களுக்கு பிறக்கும் குழந்தை கண்புரை, காது கேளாமை மற்றும் இருதய நோய் தாக்கத்துடன் பிறக்கும். எனவே அக்குழந்தைகளுக்கும் இந்த தடுப்பூசி அவசியமாக போட வேண்டும்.

நம்முடைய மாவட்டத்தில் 06.02.2017 தேதி முதல் 28.02.2017 ஆம் தேதி வரை இந்த தட்டம்மை மற்றும் ரூபெல்லா (MR) தடுப்பூசி முகாம் நடைபெவுள்ளது. இம்முகாம்கள் 100 சதவிகிதம் குழு இலக்கினை அடைந்திடும் வகையில் பள்ளிக் கல்வித்துறை, ஊட்டச்சத்து துறை, சமூக நலத்துறை, நகராட்சி துறை மற்றும் மின்சாரத் துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து துறை சார்பாக கண்காணிப்பு அலுவலர்களை நியமிக்க வேண்டும். அலுவலர்களுக்கு முகாம் குறித்த முறையான பயிற்சி வழங்கவும், அரசு மற்றும் தனியார் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி வழங்கவும், இம்முகாமின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் அனைத்து பள்ளிகளிலும் கூட்டங்களை நடத்திடவும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் மூலம் முகாமிற்கான உரிய ஏற்பாடுகளை செய்வதை உறுதி செய்யவும், முகாம் நேரங்களில் நடையில்லா மின்சாரம் வழங்கவும் துறை சார்ந்த அலுவலர் நடைவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் உலக சுகாதார நிறுவன மேற்பார்வை அலுவலர் மரு.சுதிர்ஜோஷி, உலக சுகாதார நிறுவன கண்காணிப்பு அலுவலர் மரு.ராஜுவ் குமார், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.கலிவரதன், துணை இயக்குநர்கள் (சுகாதார பணிகள்) மரு.கே.எஸ்.டி.சுரேஷ், மரு.தேவபார்த்தசாரதி, துணை இயக்குநர் (குடும்ப நலம்) மரு.சாந்தி, வேலூர் மருத்துவ கல்லூரி குழந்தைகள் நல மருத்துவர் மரு.தேரணி ராஜன் மற்றும் அனைத்து மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலை மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

18/1/17